TNTET – 2012. FREE TRAINING FOR ALL.
By
NAPOO SOUNTHAR
www.napoos.blogspot.in

நன்றி : M.KANAGARAJ D.T.Ed., B.A.,

## அறிவியல் STD - VI

01) நாம் வாழும் பூமி, விண்வெளி அதிலுள்ள கோள்கள் விண்மீன்கள் அவற்றின் இயக்கம் ,வெளிச்சம்(ஒளி),ஓசை(ஒலி) என விரியும் அறிவியலை இயற்பியல் என்கிறோம்

02) நாம் பயன்படுத்தும் பொருள்கள் எதனால் ஆனவை? உலோகமா? அலோகமா? தன்மை என்ன? நெடி என்ன? மணம் என்ன? சுவை என்ன?அமிலமா? காரமா? என்று ஆராய்வதனை வேதியியல் என்கிறோம்

03) உயிருள்ளவைப் பற்றிய படிப்பு உயிரியல்

04) செடி கொடிகள் மரங்கள் பற்றி கற்பது தாவரவியல்

05) விலங்குகளை பற்றி கற்பது விலங்கியல்

06) மூலிகை - தீரும் நோய்களும் பயன்களும்

| | |
|---|---|
| தூதுவளை | - சளித்தொல்லை, கோழை அகற்றும், மார்புச்சளி நீக்கும், உடல் பலம் தரும் |
| கீழாநெல்லி | - மஞ்சள் காமாலை |
| வேம்பு | - வயிற்றுப்பசி |
| நெல்லி | - வாய்ப்புண் |
| துளசி | - சளித்தொல்லை,கோழை அகற்றும்,காய்ச்சல் நீக்கும் |
| ஓமவல்லி | - வியர்வை பெருக்கும், கோழை அகற்றும், காய்ச்சல் நீக்கும் |
| வசம்பு | - வயிறு தொடர்பான நோய்கள் |
| மஞ்சள் | - கிருமி நாசினி, உணவு, அழகுபடுத்தல் |
| பிரண்டை | - பசியைத்தூண்டும், செரிமானமின்மையை நீக்கும் |
| இஞ்சி | - செரிமானக் கோளாறுகள் |
| மிளகு | - தொண்டைக் கரகரப்பை நீக்கும் |

07) மரங்கள் - பயன்கள்

| | |
|---|---|
| நார்த்தாவரங்கள் | - தலையனை, மெத்தை, பாய் விரிப்புகள் |
| இலவம் | - தீப்பெட்டி, தீக்குச்சி, சிறு பொம்மைகள், தலையனை, மெத்தை, பஞ்சு |
| பலா | - கட்டுமானம், பழங்கள் |
| யூகலிப்டஸ் | - தைலம், காகிதம் |
| மா | - விவசாயக்கருவிகள், கட்டுமானம், மரப்பெட்டிகள், பழங்கள் |
| சந்தனம் | - சந்தனம், கலைப்பொருள்கள், மரச்சாமான்கள் |
| பைன் | - இரயில் படுக்கைகள், படகுகள் |
| கருவேல மரம் | - மாட்டுவண்டியின் பாகங்கள் |
| வில்லோ | - விளையாட்டு சாமான்கள், கிரிக்கெட் மட்டை |
| மல்பரி | - டென்னிஸ் மற்றும் ஹாக்கி மட்டைகள் |

08) ஆப்பிரிக்காவின் ஜிம்பாப்வே நாட்டிலுள்ள போபாப் என்னும் மரங்களின் தண்டுப்பகுதி மிகவும் அகலமானவை

09) பழமரங்களிலேயே நீண்ட காலம் விளைச்சல் தருவது ஆரஞ்சு மரம் ( 400 ஆண்டுகள் )

10) மிகப்பெரிய பூப்பூக்கும் தாவரம் ராப்லேசியா. இதன் விட்டம் ஒரு மீட்டர்

11) தீப்பற்றாத மரங்கள் செம்மரம் எனப்படும் ரெட்வுட் மரங்கள்

12) ஒரு தர்பூசணிப்பழத்திலிருந்து 6,00,000 தர்பூசணிச் செடிகளை உற்பத்தி செய்து 180 டன் எடையுள்ள தர்பூசணிகளைப் பெறலாம்

13) மிளகு தாவரத்தின் கனிப் பகுதி ஆகும்

14) அதிக அளவு நீர் கொண்ட உணவுப்பொருள் வெள்ளரிக்காய்

15) நீரின் அளவு :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெள்ளரிக்காய் | 95% | காளான் | 92% | பால் | 87% |
| உருளைக்கிழங்கு | 75% | முட்டை | 73% | ஒரு துண்டு ரொட்டி | 25% |

16) ஊட்டச் சத்து குறைபாட்டு நோய்கள் :

| ஊட்டச் சத்து | நோய் |
|---|---|
| புரதம் | குவாஷியோர்கர், மராஸ்மஸ் |
| வைட்டமின் ஏ | மாலைக்கண்நோய் |
| வைட்டமின் பி1 | பெரி-பெரி |
| வைட்டமின் சி | ஸ்கர்வி |
| வைட்டமின் டி | ரிக்கட்ஸ் |
| கால்சியம் | எலும்பு மற்றும் பல் சிதைவு |
| அயோடின் | முன் கழுத்துக் கழலை |
| இரும்பு | இரத்தசோகை |

17) தனக்குத் தேவையான உணவை தானே தயாரித்துக் கொள்ளுதல் தற்சார்பு ஊட்ட முறை எனப்படும், (எ-கா) (தாவரங்கள், யூக்ளினா )

18) தனக்குத் தேவையான உணவை தானே தயாரித்துக் கொள்ளாமல் பிற உயிரினங்களைச் சார்ந்து வாழ்வது பிற ஊட்டமுறை.

19) ஒட்டுண்ணிகளின் வகைகள் : 1) புற ஒட்டுண்ணி 2) அக ஒட்டுண்ணி

20) தாவரம் உணவிற்க்காக பிற தாவரங்களை சார்ந்து வாழ்வது ஒட்டுண்ணி ஊட்ட முறை எ.கா கஸ்குட்டா

21) உடலில் உட்பகுதியில் வாழ்ந்து அங்கிருந்தே உணவைப் பெறுவது அக ஒட்டுண்ணி எ.கா. உருளைப்புழு

22) பிற உயிரினங்களில் உடலின் வெளிப்பரப்பில் ஒட்டிகொண்டு அவற்றில் இருந்து உணவைப் பெறுவது புற ஒட்டுண்ணி எ.கா பேன், அட்டைபூச்சி

23) இறந்து போன தாவர, விலங்குப் பொருள்களை மக்கச் செய்து எளிய மூலக்கூறுகளாக மாற்றி, அவற்றை உடல் சுவர் வழியாக உறிஞ்சுவது சாறுண்ணி உணவூட்ட,ம்

24) பூச்சிகளை உண்ணும் தாவரங்கள் நெப்பந்தஸ், டிரோசீரா, யுட்ரிகுலேரியா

25) “செல்லுலா” எனும் இலத்தீன் மொழிச் சொல்லுக்கு ஒரு சிறிய அறை என்று பெயர்

26) செல் எனப் பெயரிட்டவர் இராபர்ட் ஹீக்

27) உட்கருவைக் கண்டறிந்தவர் இராபர்ட் பிரௌன்

28) நுண்ணுறுப்புகள் இல்லாத தெளிவற்ற உட்கரு மட்டும் கொண்ட செல் புரோகேரியாடிக் செல் (எ.கா பாக்டீரியா )

29) செல்லின் வெளிச்சுவர் உட்கரு உட்பட நுண் உறுப்புகள் அனைத்தும் கொண்ட செல் யூகேரியாட்டிக் செல்

30) சைட்டோபிளாசம் மற்றும் செல்லின் உட்கரு ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது புரோட்டோபிளாசம்

31) புரோட்டோபிளாசம் என்று பெயரிட்டவர் ஜே.இ.பர்கின்ஜி

32) புரோட்டோ என்றால் முதன்மை என்று பொருள். பிளாஸ்மா என்றால் கூழ் போன்ற அமைப்பு என்று பொருள்
33) செல்லின் ஆற்றல் மையங்கள் என்று அழைக்கப்படுவது மைட்டோகாண்ட்ரியா
34) செல்லின் புரதத் தொழிற்சாலை என்று அழைக்கப்படுவது ரிபோசோம்கள்
35) செல்லின் தற்கொலைப் பைகள் என்று அழைக்கப்படுவது லைசோசோம்கள்
36) செல்லின் காவலர்கள் லைசோசோம்கள்
37) சென்ட்ரோசோம்கள் எனும் நுண் உறுப்பு இல்லாத செல் தாவர செல்
38) செல்லுக்கு வடிவத்தைத் தரும் வெளியுறை செல்சுவர்
39) செல்சுவர் செல்லுலோசினால் ஆனது
40) தாவரசெல்லில் மட்டும் காணப்படுவது செல்சுவர்
41) மனித உடலில் உள்ள செல்களின் எண்ணிக்கை 6,50,00,000
42) எலும்புகள் ஈரப்பசையற்ற சிறப்பு வகைச் செல்களால் ஆனது
43) இரத்தம் சிவப்பு செல்களால் ஆனவை என்பதை உலகிற்குக் கண்டுபிடித்து அறிவித்தவர் ஆண்டன் வான் லூவன்ஹாக்
44) “சிற்றினங்களின் தோற்றம்” என்ற நூலை எழுதியவர் சார்லஸ் டார்வின்
45) வைரஸ்களைப் பற்றிய அறிவியல் பிரிவு வைராலஜி
46) பாக்டீரியா பற்றிய அறிவியல் பிரிவு பாக்டீரியாலஜி
47) பால் தயிராக மாறுவதற்கும், குப்பை உரமாகவும் மாறுவதற்கு காரணம் பாக்டீரியா என்று கண்டறிந்தவர் ஆண்டன் வான் லூவன்ஹாக்
48) டிப்தீரியா, பயோரியா ( பல் கோளாறு )போன்ற நோய்கள் பாக்டீரியாவால் ஏற்படுகிறது
49) பாக்டீரியாவால் ஏற்படும் நோய்கள்
தாவரங்கள் : எலுமிச்சை, தக்காளி வாடல் நோய்
விலங்குகள் : ஆந்தராக்ஸ், காசநோய்
மனிதர்கள் : நிமோனியா, டெட்டனஸ், காசநோய்
50) எய்ட்ஸை உண்டாக்கும் HIV வைரஸை இராபர்ட் கேலோ 1984ல் கண்டுபிடித்தார்
51) எலக்ட்ரான் நுண்ணோக்கி 1931-ம் ஆண்டு ஏர்னஸ்ட் ரஸ்கா மற்றும் மாக்ஸ் நால் ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டது
52) உழவனின் எதிரி வெட்டுக்கிளி
53) கிளாமிடாமோனஸ் என்பது ஒருசெல் நகரும் தாவரம்
54) உழவனின் நண்பன் மண்புழு
55) மனிதனின் சிறுகுடலில் வாழும் புழுக்கள் நாடாப்புழு, கொக்கிப்புழு, அஸ்காரிகஸ்
56) கொசு ஒழிப்பு தினம் அக்டோபர் 20
57) கொசு,ஈ,தேனீ போன்றவற்றிற்கு கூட்டுக்கண்கள் உண்டு
58) தோல் முழுவதும் கால்சியத்தால் ஆன முட்கள் காணப்படும் மீன் நட்சத்திர மீன்
59) சில தாவரங்களில் விதையைச் சுற்றி எந்த உறைப்பகுதியும் காணப்படுவதில்லை இதனை திறந்த விதைகளுடைய தாவரங்கள் என்று பெயர் எகா : பைனஸ், பைன்
60) பிரிக்க முடிந்த விதைகளை உடைய தாவரங்கள் இரு வித்திலைத் தாவரங்கள் ஆகும்
61) பிரிக்க முடியாத விதைகளை உடைய தாவரங்கள் ஒரு வித்திலைத் தாவரங்கள் ஆகும்
62) நச்சுப் பாம்புகள் நாகப்பாம்பு, கட்டுவிரியன், இராஜநாகம்

| வ.எண் | பாகம் | ஒரு வித்திலைத் தாவரம் | இரு வித்திலைத் தாவரம் |
|---|---|---|---|
| 1) | வேர் | சல்லிவேர் | ஆணிவேர் |

| | | | |
|---|---|---|---|
| 63) 2) | நரம்பமைவு | இணைப்போக்கு நரம்பமைவு<br>எ.கா : புல் | வலைப்பின்னல் நரம்பமைவு<br>எ.கா : செம்பருத்தி |

64) முதலைகளுக்கு நிறக்குருடு உண்டு
65) பச்சோந்தியின் நாக்கு உடலின் நீளத்தைப் போல் இருமடங்கு ஆகும்
66) இராஜநாகம் சுமார் 5.5மீட்டர் வரை நீளமுடையது
67) உலகின் மிகப் பெரிய நஞ்சுப் பாம்பு இராஜநாகம்
68) இராஜநாகத்தின் ஒருதுளி நஞ்சு 30மனிதர்களை கொல்லும் திறனுடையது
69) நீலத்திமிங்கலம் என்பது வாழும் உயிரினங்களில் மிகப்பெரியது
70) நீலத்திமிங்கலத்தின் எடை சுமார் 22 யானைகளின் எடைக்கு சமம்
71) விண்வெளிக்கு அனுப்பபட்ட முதல் விலங்கு நாய் ( லைக்கா )
72) பசுவிற்கு வியர்வைச் சுரப்பிகள் அதன் மூக்கில் இருக்கும்
73) தரையில் முதுகுபடும்படி உறங்கும் ஒரே விலங்கு மனிதன்
74) யானையின் வெட்டுப் பற்களே தந்தங்கள்
75) யானையின் நாசி, மேலுதட்டின் மாறுபட்ட வடிவமே துதிக்கை
76) ஒரு நெருப்புக்கோழியின் முட்டை 22கோழி முட்டைகளுக்கு சமம்
77) புற்றுநோய் உட்பட எந்த நோயும் வராத ஒரே உயிரினம் சுறாமீன்
78) ஒரு சிங்கம் கர்ஜிப்பதை 5 கி.மீ வரை கேட்க முடியும்
79) உலகின் மிகப்பெரிய பாம்பு அனகோண்டா. இது முட்டையிடாது குட்டி ஈனும்
80) தயிராக மாற்ற முடியாத பால் ஒட்டகப் பால்
81) நாக்கை நீட்ட முடியாத ஒரே உயிரினம் முதலை
82) அனைத்து திசைகளிலும் பறக்கும் ஒரே பறவை தேன்சிட்டு
83) உலகின் எந்த இடத்தில் வேண்டுமானாலும் வசிக்கக் கூடிய பூச்சியினங்கள் கொசு,ஈ,தேனி
84) மனிதன் ஒரு பாலூட்டி
85) ஒரு செல் தாவரம் கிளாமிடோமோனஸ்
86) நடக்கத் தெரியாத பறவைகள் மரங்கொத்தி, தேன்சிட்டு
87) ஒட்டகத்தைப் விட அதிக நாட்கள் குடிநீர் இன்றி வாழ முடிந்த விலங்கு கங்காருஎலி
88) மனித உடலில் மட்டும் 17,000 வகை நுண்கிருமிகள் வாழ்கின்றன
89) இடக் கைப் பழக்கம் உடைய விலங்கு துருவக்கரடிகள்
90) கூரான பிளேடின் முனையில் கூட அடிபட்டுக் கொள்ளாமல் கடந்து போகக்கூடியது நத்தை
91) உலகில் அதிக வகைபாடுகள் கொண்ட உயிரிகள் நுண்ணுயிரிகள்
92) ஒரு புள்ளி இடத்தை 70,000 அமீபாக்களால் நிரப்ப முடியும்
93) கழிவுப் பொருள்கள் மண்புழுக்களால் சிதைவுற்று தோன்றுவது கலப்புப் புழு உரம்
94) ஒரு நாளில் தன் எடைக்குச் சமமான அளவு உணவை உண்ணுவது மண்புழு
95) நீரின் மூலமாக பரவக்கூடிய நோய்கள் காலரா, டைபாய்டு, சீதபேதி, மஞ்சள்காமாலை
96) உலக மக்கள் தொகையில் 25% மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை
97) காற்றினால் பரவும் நோய்கள் ஒவ்வாமை, இருமல் ,சளி, இதயநோய்கள்,
சுவாசக் கோளாறுகள், புற்றுநோய்
98) ஒலியை அளக்க பயன்படும் அலகு டெசிபல்
99) 10 முதல் 20 டெசிபல் வரையிலான ஒலியை மட்டுமே மனிதனால் கேட்க இயலும்
100) சிதைவுறாக் கழிவுக்கு எ.கா பாலிதீன் பை
101) மண்புழு வளர்க்கும் இடத்திற்கு உரக்குழி என்று பெயர்
102) சிதைவுறு பொருள்களை மண்ணில் மக்கச் செய்பவை நுண்ணுயிரிகள்

103) <u>1862 ஆம் ஆண்டு இலண்டனில் நடந்த சர்வதேச பொருட்காட்சியில்</u> தான் பிளாஸ்டிக் அறிமுகம் செய்யப்பட்டது

104) ஒரு மோட்டார் வாகனத்தை ஓட்ட பயன்படும் எரிபொருளின் அளவு <u>30%</u> மீதி <u>70%</u> எரிபொருள் <u>கார்பன் மோனாக்ஸைடாக</u> வெளியேறுகிறது

105) கல்பனாசாவ்லா முதன் முதலில் விண்வெளிக்குச் சென்ற விண்கலத்தின் பெயர் <u>கொலம்பியா</u>

106) சில மாற்றங்கள் நிகழும் போது மாற்றமடைந்த பொருள்கள் தங்கள் இயல்பு நிலைக்கு திரும்பி வருவது <u>மீள்மாற்றங்கள்</u>

107) சில மாற்றங்கள் நிகழும் போது மாற்றமடைந்த பொருள்கள் தங்கள் இயல்பு நிலைக்கு திரும்ப இயலாதது <u>மீளா மாற்றங்கள்</u>

108) நல்ல பயன்களைத் தரும் மாற்றங்கள் <u>விரும்பத்தக்க மாற்றங்கள்</u>

109) நல்ல பயன்களைத் தராத மாற்றங்கள் <u>விரும்பத்தகாத மாற்றங்கள்</u>

110) முறையான கால இடைவெளியில் மீண்டும் மீண்டும் நிகழும் மாற்றங்கள் <u>கால ஒழுங்கு மாற்றம்</u> எ.கா இதய துடிப்பு

111) முறையான கால இடைவெளியில் மீண்டும் மீண்டும் நிகழாத மாற்றம் <u>கால ஒழுங்கற்ற மாற்றம்</u> எ.கா நிலநடுக்கம்

112) வெப்பம் உமிழப்பட்டு நிகழும் மாற்றங்கள் <u>வெப்பம் உமிழ் மாற்றங்கள்</u>

113) வெப்பம் உறிஞ்சப்பட்டு நிகழும் மாற்றங்கள் <u>வெப்பம் கொள் மாற்றங்கள்</u>

114) நிறம் ,அளவு, வடிவத்தின் அடிப்படையில் பொருள்களைப் பிரித்தல் <u>கையால் பிரித்தெடுத்தல்</u> எனப்படும்

115) தானியங்களைப் பிரித்தெடுக்கும் முறை <u>தூற்றுதல்</u>

116) ஒரே கலவையில் உள்ள பொருள்களின் பருமனளவு வேறுபட்டால் அதை <u>சலித்தல்</u> முறையில் பிரிக்கலாம்

117) ஒரு நீர்மத்தை வெப்பத்தால் ஆவியாக மாற்றும் முறை <u>ஆவியாதல்</u> எனப்படுகிறது

118) நீர்மங்களில் கரைந்துள்ள திண்மப்பொருள்களைப் பிரிக்கும் முறைகள் <u>ஆவியாதல், ஆவி சுருங்கி நீர்மமாதல், படிகமாதல்</u>

119) நீரில் கரையாத திண்மங்களையும் ஒன்றை விட மற்றொன்று கனமான பகுதிப்பொருள்களாய்க் கொண்ட கலவைகளையும் <u>தெளியவைத்தல், தெளிய வைத்து இறுத்தல், வடிகட்டுதல்</u> மூலமாகப் பிரிக்கலாம்

120) ஒரு லிட்டர் கடல் நீரில் <u>சுமார் 3.5 கிராம்</u> உப்பு கரைந்துள்ளது

121) கடல் நீரில் நாம் உண்ணும் உப்பு மட்டும் இல்லாமல் <u>50</u> க்கும் மேற்ப்பட்ட <u>கனிமங்கள்</u> உள்ளன

122) மணலும் ,நீரும் கலந்த கலவையை <u>தெளிய வைத்து இறுத்து வடிகட்டல்</u> மூலமாகப் பிரிக்கலாம்

123) ரவையும் நீரும் கலந்த கலவையை <u>வடிகட்டல்</u> மூலமாகப் பிரிக்கலாம்

124) உப்பும் நீரும் கலந்த கலவையை <u>ஆவியாக்குதல்</u> மூலமாகப் பிரிக்கலாம்

125) கலவையில் உள்ள லேசான மாசுக்களை நீக்க ஏற்ற முறை <u>தூற்றுதல்</u>

126) கலவையில் உள்ள பொருள்களின் அளவை அடிப்படையாகக் கொண்ட பிரித்தல் முறை <u>சலித்தல்</u>

127) பழச்சாறு தயாரிப்பில் சாற்றிலிருந்து விதைகளைப் பிரிக்க ஏற்ற முறை <u>வடிகட்டுதல்</u>

128) உப்பைக் கடல்நீரிலிருந்து பிரிக்கும் முறை <u>ஆவியாதல்</u>

129) ஆய்வகங்களில் வடிகட்ட பயன்படுவது <u>வடிதாள்</u>

130) உப்பளங்களில் உப்பைப் பிரித்தெடுக்க கையாளப்படும் முறை <u>படிகமாதல்</u>

131) பெட்ரோல் ,மண்ணெண்ணயிலிருந்து அந்துருண்டை ( நாப்தலின் ) வரை ஏறக்குறைய எண்பத்தாறு வகையான பொருள்கள் கச்சா எண்ணெய் எனும் கலவையில் இருந்தே பிரித்தெடுக்கப்படுகின்றன

132) சிமெண்ட், மணல், நீர் சேர்ந்த கலவையே சிமெண்ட் சாந்து ஆகும்

133) சிமெண்ட், மணல், சிறு கருங்கற்கள், நீர் ஆகியவை கலந்த கலவை கான்கிரீட்

134) வெப்பத்தால் உருகி இளகிப்போகும் சில பிளாஸ்டிக்குகள் குளிர வைத்தால் உறுதியாகுகின்றன. இவை இளகும் பிளாஸ்டிக்குகள் என அழைக்கப்படுகின்றன. எ.கா பாலிதீன் பைகள்

135) வெப்பப்படுத்தும் போது கெட்டியாகியும், குளிர வைக்கும் போது மாற்ற முடியாத அளவிற்கு இறுகி உறுதியாகும் பொருள்கள் இறுகும் பிளாஸ்டிக்குகள் என அழைக்கப்படுகின்றன. எ.கா பிளாஸ்டிக் நாற்காலி, மின் பொத்தான்

136) 100% மறு சுழற்சி செய்யப்படும் பொருள் கண்ணாடி மட்டுமே

137) நூலைப் பிரிக்கும் போது கிடைக்கும் மெல்லியப் பகுதியே இழை எனப்படும்

138) தாவரங்களிலிருந்து பருத்தி, சணல், தேங்காய் நார் இழைகளும், பட்டுப்பூச்சியிலிருந்து பட்டு இழையும், செம்மறி ஆடு போன்ற கால்நடைகளின் ரோமத்திலிருந்து கம்பளி இழையும் இயற்கை இழைகளாகும்

139) பாலியெஸ்டர், நைலான், ரேயான் போன்றவை செயற்கை இழைகளாகும்

140) சுண்ணாம்புக்கல், களிமண் ஆகியவற்றுடன் ஜிப்சம் சேர்த்து சிமெண்ட் தயாரிக்கப்படுகிறது

141) பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில்கள் பி. வி. சி பிளாஸ்டிக்கால் ஆனது

142) மறுசுழற்சிக்குப் பயன்படாத பிளாஸ்டிக் இறுகும் பிளாஸ்டிக்

143) வாளிகள் இளகும் பிளாஸ்டிக்கால் தயாரிக்கப்படுகிறது

144) கண்ணாடியில் பயன்படும் வேதிப்பொருள் சோடியம் சிலிக்கேட்

145) கண்ணாடியின் ஒரு பக்கத்தில் வேதிப்பொருள் பூசிய கண்ணாடி முகம் பார்க்க பயன்படுகிறது

146) பஞ்சில் உள்ள வேதிப்பொருள் செல்லுலோஸ்

147) செயற்கை இழை மூலம் தயாரிக்கப்படும் பொருளுக்கு எ. கா பாராசூட்

148) PVC எனும் இளகும் பிளாஸ்டிக்கின் வேதிப்பொருளின் பெயர் பாலிவினைல் குளோரைடு

149) ஜிப்சம் என்பது கால்சியம் சல்பேட்

150) சோப்பு தயாரித்தலுக்குத் தேவையான மூலப்பொருள்கள் சோடியம் ஹைட்ராக்ஸைடு, எண்ணெய் அல்லது கொழுப்பு

151) நீளத்தின் S.I அலகு மீட்டர்

152) நிறையின் S.I அலகிற்கான குறியீடு கி.கி

153) ஒரு மெட்ரிக் டன் என்பது 1000 கிலோகிராம்

154) காலத்தின் S.I அலகு விநாடி

155) ஒரு மணி = 3600 விநாடி

156) ஒரு குவிண்டால் 100 கிலோகிராம்

157) நெய் மற்றும் எண்ணெயை அளக்கப் பயன்படுவது அளவீட்டுமுகவை

158) SI என்பது The System International D Units

159) FPS என்பது Foot, Pound, Second

160) CGS என்பது Centimetre, Gram, Second

161) MKS என்பது Metre, Kilogram, Second

162) தற்காலத்தில் நேரத்தை துல்லியமாக அளவிடப் பயன்படும் கடிகாரம் அணுகடிகாரம்

163) ஒரு பொருளில் அடங்கியுள்ள பருப்பொருளின் அளவே அப்பொருளின் நிறை எனப்படும்

164) நீளத்தின் துணைப் பன்மடங்கு மில்லி மீட்டர்

165) அனைவருக்கும் ஒரே மாதிரியான அளவைப் பெற திட்டஅளவீடு பயன்படுகிறது

166) அடிப்படை அளவுகள் நீளம், நிறை, காலம்
167) FPS முறையில் நிறையின் அலகு பவுண்டு
168) MKS முறையில் நீளத்தின் அலகு மீட்டர்
169) அடி என்பது FPS நீளத்தின் அலகாகக் கருதப்படுகிறது
170) பன்னாட்டு அலகு முறையின் குறியீடு SI
171) பல அலகு முறைகளினால் ஏற்படும் குழப்பத்தைத் தீர்க்க கொண்டு வரப்பட்டது பன்னாட்டு அலகு முறை ( 1971 )
172) ஒரு விநாடி என்பது 10,00,000 மைக்ரோ விநாடி
173) கிலோகிராமின் ( நிறை ) பன்மடங்குகள் குவிண்டால், மெட்ரிக் டன்.
துணைப் பன்மடங்குகள் மில்லி கிராம், கிராம்
174) விநாடியின் பன்மடங்குகள் நிமிடம், மணி, நாள், வாரம், மாதம், ஆண்டு
துணைப் பன்மடங்குகள் மில்லி விநாடி, மைக்ரோ விநாடி
175) தரையில் உருளும் பந்தின் இயக்கம் நேர்கோட்டு இயக்கம்
176) ரோபோவின் தந்தை எனப்படுபவர் ஐசக் அசிமோ
177) நேரத்தைப் பொருத்து ஒரு பொருளின் நிலை மாறாமல் இருந்தால் அது ஓய்வு நிலை
178) புவியைச் சுற்றும் நிலவின் இயக்கம் வட்ட இயக்கம்
179) மின் தூக்கியின் இயக்கம் நேர்கோட்டு இயக்கம்
180) ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இயக்கங்களைப் பெற்றிருக்கும் பொருளுக்கு எ. கா மிதிவண்டி
181) புவியின் சுழற்சி இயக்கத்தின் விளைவு இரவு பகல் தோன்றுதல்
182) ஓய்வும், இயக்கமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன
183) முன்னும் பின்னும் அல்லது வலமும் இடமும் செல்லும் இயக்கம் அதிர்வு இயக்கம்
184) திருவிழாக்களில் மனிதர்களின் இயக்கம் ஒழுங்கற்ற இயக்கம்
185) 100மீ ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்கும் வீரனின் இயக்கம் நேர்கோட்டு இயக்கம்
186) தென்னை மரத்திலிருந்து கீழே விழும் தேங்காயின் இயக்கம் நேர்கோட்டு இயக்கம்
187) நிமிர்ந்த சீரான நடையுடன் செல்லும் இராணுவ வீரர்களின் இயக்கம் சீரான இயக்கம்
188) கால் பந்தாட்டத்தில் பந்தின் இயக்கம் ஒழுங்கற்ற இயக்கம்
189) நாயினுடைய வாலின் இயக்கம் அதிர்வு இயக்கம்
190) யானையினுடைய காதின் இயக்கம் அலைவு இயக்கம்
191) மாக்னடைட் ஓர் இயற்கைக் காந்தம்
192) காந்தத்தில் ஈர்ப்பு சக்தி அதிகமுள்ள பகுதி இரு முனைகளிலும்
193) மாலுமிகளுக்கு திசைக்காட்டும் கருவிகளை அளித்தவர்கள் சீனர்கள்
194) சக்தி வாய்ந்த மின் காந்தம் பயன்படும் கருவி பளுதூக்கிகள்
195) தானியங்கி படிக்கட்டுகளில் பயன்படுவது மின் காந்தம்
196) காந்தம் முதன் முதலில் கண்டறியப்பட்ட இடம் மெக்னீசியா
197) காந்தத்தைக் கண்டுபிடித்தவர் மாக்னஸ்
198) மிதக்கும் தொடர்வண்டி என்பது மின்காந்த தொடர்வண்டி
199) மின்காந்த தொடர்வண்டிக்கு சக்கரங்கள் கிடையாது
200) 1853 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் தொடர்வண்டி மும்பையிலிருந்து தானே என்ற ஊருக்குச் சென்றது
201) ஜெயண்ட் வீல் எனப்படும் மிகப்பெரிய இராட்டினங்களை இயக்க மின் காந்தம் பயன்படுகிறது
202) டார்ச் விளக்கு வேதி ஆற்றலை ஒளி ஆற்றலாக மாற்றுகிறது
203) வானொலி மின் ஆற்றலை ஒலி ஆற்றலாக மாற்றுகிறது
204) இஸ்திரிப்பெட்டி மின் ஆற்றலை வெப்ப ஆற்றலாக மாற்றுகிறது

205) மின் மோட்டார் மின் ஆற்றலை இயந்திர ஆற்றலாக மாற்றுகிறது

206) மின்னாக்கி ( Generator ) இயந்திர ஆற்றலை மின் ஆற்றலாக மாற்றுகிறது

207)

| *பொருள்* | _ | *ஆற்றல் வகை* |
|---|---|---|
| சூரியன் | _ | வெப்ப ஆற்றல் |
| நிலக்கரி | _ | வேதி ஆற்றல் |
| ராக்கெட் | _ | இயந்திர ஆற்றல் |
| ஏரியில் உள்ள நீர் | _ | நிலை ஆற்றல் |
| சூரிய மின்கலன் | _ | மின் ஆற்றல் |
| நீர் வீழ்ச்சி | _ | இயக்க ஆற்றல் |
| அமுக்கப்பட்ட சுருள்வில் | _ | நிலை ஆற்றல் |
| சாணம் | _ | வேதி ஆற்றல் |
| நகரும் மேகம் | _ | இயக்க ஆற்றல் |
| விறகு | _ | வேதி ஆற்றல் |

208) வெப்பம் ஒரு வகை ஆற்றல் என்பதைக் கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் ஜூல்

209) நிலக்கரியை எரிக்கும் போது அதன் வேதி ஆற்றல் வெப்ப ஆற்றலாக மாற்றப்படுகிறது

210) வேலை செய்வதற்கான திறமை ஆற்றல்

211) சமையல் சோடாவுடன் வினிகரைச் சேர்த்தால் வெளிப்படுவது கார்பன் டை ஆக்ஸைடு

212) நீராற்றலைப் பயன்படுத்தி மின்னாற்றல் தாயாரிக்க உதவும் சாதனம் மின்னாக்கி

213) நீர் மின் ஆற்றல் தயாரிக்கப்படும் இடங்கள் மேட்டூர், பவானிசாகர்

214) எல்லா வகை ஆற்றல்களுக்கும் மூலமாகச் செயல்படுவது சூரியன்

215) இயங்கும் பொருளொன்றை ஓய்வு நிலைக்குக் கொண்டு வரத் தேவையான ஆற்றல் இயந்திர ஆற்றல்

216) உராய்வின் மூலம் கிடைக்கும் ஆற்றல் வெப்ப ஆற்றல்

217) கணக்கீட்டு கருவிகளில் பயன்படுவது சூரிய மின்கலம்

218) மைக்ரோபோனில் ஒலி ஆற்றல் மின் ஆற்றலாக மாற்றப்படுகிறது

219) ஆற்றலின் அலகு ஜூல்

220) ஒளிச் சேர்க்கையின் போது ஒளி ஆற்றல் வேதி ஆற்றலாக மாற்றப்படுகிறது

221) தொலைநோக்கியைக் கண்டுபிடித்தவர் கலிலியோ ( 1609ல் )

222) கலிலியோ பயன்படுத்திய தொலைநோக்கி தற்போது இத்தாலி நாட்டிலுள்ள பிளாரன்ஸ் நகரில் உள்ளது

223) சூரிய ஒளி புவியை அடைய 8 நிமிடங்கள் 20 விநாடிகள் ஆகிறது

224) உலக விண்வெளி ஆண்டு 2009

225) தன் வழியே ஒளியைச் செல்ல அனுமதிக்கும் பொருள்கள் ஒளிபுகும் பொருள்கள்

226) தன் வழியே ஒளியைச் செல்ல அனுமதிக்காத பொருள்கள் ஒளிபுகாப் பொருள்கள்

227) தன் வழியே பகுதியாக ஒளியைச் செல்ல அனுமதிக்கும் பொருள்கள் ஒளி கசியும் பொருள்கள் எ.கா எண்ணெய் தடவிய காகிதம்

228) நிழல்களை உருவாக்குபவை ஒளிபுகாப் பொருள்கள் மட்டுமே

229) நிழல்கள் உருவாக தேவையானவை ஒளிமூலம், ஒளிபுகாப் பொருள், திரை

230) பொருள்களைப் பார்க்க நமக்குத் தேவை ஒளி

231) சூரிய மையக் கோட்பாட்டை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் கோபர் நிக்கஸ்

232) கோபர் நிக்கஸ் கோட்பாட்டினை உறுதி செய்து நிரூபித்துக் காட்டியவர் கலிலியோ

233) ஒளியின் பாதை நேர்கோட்டுப்பாதை

234) சமதளத்தைக் கொண்ட பளபளப்பான பொருள்களின் மீது ஒளிபட்டால் நிகழ்வது எதிரொளிப்பு

235) ஒளியின் நேர்கோட்டு இயக்கத்தால் நிகழும் இயற்கை நிகழ்வு கிரகணம் உண்டாதல்